2011 ஆகஸ்ட் 25]

செயல்படும் என்பதனை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பிரச்சினைகளை கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறோம். அதை இனிமேலாவது தினந்தோறும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மத்தியிலே ஊழலுக்கு எதிரான ஒரு வலுவான சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று அன்னா ஹசாரே தொடர்ந்து காலவரையற்ற உண்ணாவிரதத்தில் இருந்துகொண்டிருக்கிறார். அதனுடைய ஒரு பகுதியாக தமிழகத்தில், சென்னை நகரில் சட்டமன்றம் நடைபெறுகிற நேரத்தில் 9-வது நாளாக ஊழலுக்கு எதிரானவர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை அரசு சார்பிலே யாரும் சந்தித்தார்களா? அதைப் பற்றி ஏதாவது அறிக்கை இந்த நேரத்திலே அளித்தால் சரியாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுகுறித்து என்னிடத்திலே எந்த அறிவிப்பும் கொடுக்காமல் இப்படி எழுந்து பேசினால், அது எந்தவிதத்திலே சரி என்று நான் கேட்கிறேன். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு உறுப்பினர், நாளை ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படும். இது இல்லை. இதுகுறித்து என் அறையில் வந்து பேசுங்கள்.